## நிமஉது நக எண்.எல்இ8/1983/2005
## ஆணையரின் 27.12.2007 நாளிட்ட குறிப்பு

## 31.01.2008 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்

தீர்மான எண்.44/2008 பொருள் எண்: 44

### காவல் நிலையம் கட்டுவதற்கு நில ஒதுக்கீடு

மண்டலம்–8, வார்டு எண்–120ல், ஆர்.2, கோடம்பாக்கம் காவல் நிலையம் கட்டுவதற்காக சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான நிலத்தினை காவல் துறைக்கு ஒதுக்கீடு செய்து வழங்கிடுமாறு 27.4.2005 நாளிட்ட காவல்துறை ஆணையரின் கடிதத்தில் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

காவல் துறை கோரியுள்ள நிலம் புலியூர் கிராமம் பிளாக் எண்.45, நகர அளவை எண்.2/1 பாகத்தில் அடங்கியுள்ள சென்னை மாநகராட்சி (தனி) நிலமாகும்.

இது சம்மந்தமாக தொடர்புடைய நிலத்தினை புலத் தணிக்கை செய்ததில் காவல் துறை கோரியுள்ள நிலத்திற்கு நேரடியாக நெடுஞ்சாலையிலிருந்து செல்வதற்கு வழியாக பயன்படுத்த இடவசதி இல்லாமல் இருப்பது தெரிய வந்தது.

காவல் துறைக்கு இட ஒதுக்கீடு அளிக்கும் பட்சத்தில் இந்நிலத்தின் தென் மேற்கு மூலையில் உள்ள ஆவின் பால் நிலையத்தினை அகற்றி காலியாகும் அந்த இடத்தினை வழியாக பயன்படுத்தி கொள்ளலாம். இதனால் இந்த ஆவின் பால் நிலையத்தினை வேறு இடத்திற்கு மாற்றம் செய்துக் கொள்ளுமாறு கோரி தமிழ்நாடு பால் வள நிறுவனத்துக்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.

ஆவின் பால் நிலையம் அகற்றப்பட்டதும் ஏற்கனவே, காலியாக உள்ள நிலத்தின் வட மேற்கு மூலையில் 2 லிருந்து 3 கிரவுண்ட் நிலத்துக்கு இன்றைய சந்தை விலை மதிப்பின் அடிப்படையில் நிலக்கிரயம் செலுத்துவதற்கோ அல்லது சந்தை விலை மதிப்பில் ஒரு விழுக்காடு தொகையினை வருட வாடகையாக செலுத்துவதற்கோ காவல்துறை இசைவு அளிக்கும்பட்சத்தில், இந்நிலத்தினை 3 வருட காலத்திற்கு காவல் துறைக்கு குத்தகை அடிப்படையில் ஒதுக்கீடு செய்யலாம்.

மேற்படி நிலத்திற்கு நிலக்கிரயம் செலுத்துவதற்கு அல்லது சந்தை விலை மதிப்பில் ஒரு விழுக்காடு தொகையினை வருட வாடகையாக செலுத்துவதற்கு இசைவினை அளிக்குமாறு காவல்துறை ஆணையரை கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

இப்பொருள் தொடர்பாக 8வது மண்டல வார்டு குழுவில் விவாதிக்கப்பட்டு, மேற்குறிப்பிட்ட நிலத்தினை காவல் நிலையம் கட்டுவதற்காக காவல் துறைக்கு ஒதுக்கீடு செய்வதற்கு 8வது மண்டல வார்டு குழு தனது தீர்மானம் எண்.714, நாள்.6.12.2007ல் பரிந்துரை செய்துள்ளது.

எனவே, மண்டலம்–8, வார்டு–120ல் சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான நிலத்திற்கு இன்றைய சந்தை விலை மதிப்பின் அடிப்படையில் நிலக்கிரயம் செலுத்துவதற்கோ அல்லது சந்தை விலை மதிப்பில் ஒரு விழுக்காடு தொகையினை வருட வாடகையாக செலுத்துவதற்கோ காவல்துறை இசைவை கேட்டதையும், இந்த நிலத்தின் தென் மேற்கு மூலையிலுள்ள ஆவின் பால் நிலையம் அகற்றப்படுவது சம்மந்தமாக ஆவின் நிர்வாகத்திற்கு எழுதியதையும் மன்றத்தின் தகவலுக்காக நிலைக்குழு (வ.வி. ம. நி.) மூலமாக சமர்ப்பிக்கப்படுகிறது.

> “24.01.2008 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தின் தீர்மான எண்.04/ 2008 நாள் 24.01.2008–ன்படி இதனை நிலைக்குழு (வ.வி.ம.நி.) பதிவு செய்து மன்றத்தின் தகவலுக்காக சமர்ப்பிக்கப்படுகிறது ”

“இதனை மன்றம் பதிவு செய்கின்றது”
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: நி.ம.உ.து.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(து.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

**31.01.2008 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண்.45/2008 பொருள் எண்: 45

**நில உரிமை மாற்றம்**

கோட்டம்–129, பகுதி–23க்குட்பட்ட பகுதியான சாலிக்கிராமம் மற்றும் வடபழனியில் இந்து சமய அறநிலையத்துறைக்கு சொந்தமான காலி இடங்கள் கீழ்கண்டவாறு உள்ளன.

| வ.எண். | அமைந்த இடம் | சர்வே எண். | பரப்பளவு | குறிப்பு |
|---|---|---|---|---|
| 1 | வீரமாமுனிவர் தெரு | 59/1 | 1.92 | காலிமனை |
| 2 | இராஜாஜி தெரு, காந்தி நகர் | 41/1 43 | 2.26 | காலிமனை |
| 3 | பெரியார் தெரு | 49 | 1.85 | காலிமனை |
| 4 | அண்ணா தெரு காந்தி நகர் | 21/2, 23/1, 25/1, 26/1, 7/3 | 5.96 | காலிமனை |

மேற்கண்ட இடங்கள் முட்புதர்களால் சூழப்பட்டுள்ளதால் எந்தவித முன்னேற்றப்பணிகள் செய்யாததினாலும் சில சமூக விரோத செயல்கள் நடந்து கொண்டிருப்பதாகவும்.

எனவே, இந்நிலங்களை மாமன்ற உறுப்பினர் வார்டு–129 அவர்கள் மாமன்றத்தினில் கேட்கப்பட்ட கேள்வி எண்.6ன் மீதும் மற்றும் 8.8.2007 அன்று வார்டு குழுவின் பரிந்துரையின் மீதும் கவனம் ஈர்க்கப்பட்டு களப்பணி ஆய்வு செய்ததில் மேற்கண்ட வடபழனி ஆண்டவர் கோயிலுக்கு சொந்தமான இந்து சமய அறநிலையத் துறையின் பராமரிப்பின் கீழ் உள்ள இந்நிலங்களை தற்காலிகமாக சென்னை மாநராட்சிக்கு ஒப்படைப்பு செய்து பூங்காக்கள், பள்ளிக்கூடங்கள் மற்றும் சமுதாய நலக் கூடங்கள் கட்டினால் பொது மக்களுக்கு மிகவும் பயனுள்ளதாக இருக்கும் என மண்டல அலுவலர், மண்டலம்–8 அவர்களின் குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

மேற்கண்ட நிலத்தினை நிலம் மற்றும் உடைமைத்துறை அலுவலர்களால் புலத்தணிக்கை செய்யப்பட்டு கீழ்க்கண்டவாறு அறிக்கை தரப்பட்டுள்ளது.

| பிளாக் எண். | நகர புல எண் |
|---|---|
| 16 | 10 |
| 17 | 31 |
| 18 | 23 |
| 21 | 82 |
| 24 | 39, 57, 60 |

ஆகியவை புலத்தணிக்கை செய்யப்பட்டது.

புலத்தணிக்கையில் பார்வையிடப்பட்ட அனைத்து புலங்களும் ர. மனை என வகைப்படுத்தப்பட்ட புலங்களாகும். அனைத்து புலங்களும் வடபழனி ஆண்டவர் பெயரிலேயே பதிவு செய்யப்பட்டு உள்ளது. அனைத்து புலங்களும் வடபழனி ஆண்டவர் திருக்கோயில் நிர்வாகத்தினரால் சுற்றுச்சுவர் அமைக்கப்பட்டு உள்ளது. இந்த புலங்கள் எவ்வித பயன்பாடுகளும் இன்றி முட்புதர்களும் முட்செடி, முள்மரங்கள், புல் தரையாகவும் மற்றும் ஒருசில இடங்களில் நடைபாதையாகவும் உள்ளன.

எனவே, மண்டலம்–8ல் வார்டு 129ல் அருள்மிகு வடபழனி ஆண்டவர் கோவிலுக்கு சொந்தமான சுமார் 12 ஏக்கர் நிலம் முழுவதும் முட்புதர்களால் சூழ்ந்துள்ளதால் பல்வேறு சமூக விரோத செயல்கள் நடைபெறுவதால், இப்பகுதியை சென்னை மாநகராட்சி மூலம் மாநகராட்சி பள்ளி, பூங்காக்கள், சமூக நலக் கூடங்கள் மற்றும் இதர தேவைகளுக்கு பயன்படுத்த இந்து சமய அறநிலைய துறையின் தடையின்மை சான்றிதழினை பெறுவதற்கு உரிய நடவடிக்கையினை மேற்கொள்ள 8வது மண்டல வார்டு குழு தீர்மானத்தில் பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

<u>நி.ம.உ.து.ந.க.எண்.எல்இ1/1395/2007</u>

மேற்கண்ட நிலம் வடபழனி ஆண்டவர் கோயிலுக்கு சொந்தமானது என்பதால் பூங்கா, பள்ளி, சமூகநலக்கூடங்கள் அமைத்து பராமரிக்க அத்துறையின் இசைவினை பெறவேண்டும். இதற்காக அத்துறைக்கு 13.11.2007 நாளிட்டு கடிதம் எழுதப்பட்டுள்ளது.

வார்டு குழு தீர்மானத்தில் பரிந்துரைத்தவாறு, மண்டலம்–8, வார்டு–129ல், வடபழனி ஆண்டவர் திருக்கோயிலில் இந்து சமய அறநிலையத் துறைக்கு சொந்தமான நிலத்தில் மாநகராட்சியால் பள்ளி, பூங்காக்கள் சமூகநலக் கூடங்கள் அமைத்து பராமரிப்பது குறித்து இந்து சமய அறநிலையத்துறைக்கு எழுதப்பட்டுள்ளதை நிலைக்குழுக்கள்(பணிகள்) மற்றும் (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் தகவலுக்காக சமர்ப்பிக்கப்படுகிறது.

"22.01. 2008 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தில் தீர்மான எண்.27 நாள்: 22.1.2008-ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து நிலைக்குழு (வ.வி.ம.நி.) மூலமாக மன்றத்தின் தகவலுக்காக சமர்ப்பிக்கப்படுகிறது".

"24.01.2008 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தின் தீர்மான எண். 10 / 2008 நாள் 24.01.2008– ன்படி இதனை நிலைக்குழு (வ.வி.ம.நி.) பதிவு செய்து மன்றத்தின் தகவலுக்காக சமர்ப்பிக்கப்படுகிறது "

"இதனை மன்றம் பதிவு செய்கின்றது"
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: நி.ம.உ.து.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

**பொ.து.ந.க.எண்.பி3/23587/2007**
**ஆணையரின் 27.12.2007 நாளிட்ட குறிப்பு**

**31.01.2008 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண்.46/2008 பொருள் எண்: 46

**அரசாணை அமலாக்கம்**

அரசாணை நிலை எண் 446, நிதி(ஊதியக்குழு)துறை, நாள்: 18.09.2007–ல் உயர் நீதிமன்ற ஆணை எண் W.P.No.13333 of 2000, நாள் 09.03.2004–ன் படி, 01.01.96க்கு முன்பு அல்லது 01.07.1996க்கு பிறகு ஓய்வு பெற்றவர்களுக்கு அன்னார் ஓய்வு பெற்ற தேதியில் ஓய்வூதியம் எவ்வாறு நிர்ணயம் செய்யப்பட்டதோ அதன் அடிப்படையிலேயே, 01.01.1996 மற்றும் 30.06.1996க்கு இடைப்பட்ட காலத்தில் ஓய்வு பெற்றவர்களுடைய ஓய்வூதியத்தையும் அவரவர்களுக்கு எது அதிகபட்ச பணப்பயன் கிடைக்குமோ அதன் அடிப்படையில் (Whichever is advantageous) மறு நிர்ணயம் செய்து திருத்திய ஓய்வூதியம் அனுமதிக்க ஆணையிடப்பட்டுள்ளது. மேலும் அவ்வாறு ஓய்வூதியம் திருத்தியமைக்கப்படுவதற்காக விருப்ப கடிதம் (Option Form) அன்னாரிடமிருந்து பெற்று ஓய்வூதியம் திருத்தியமைக்கப்பட வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே உயர்நீதிமன்ற ஆணை எண் W.P.No.13333 of 2000–ன் படி 01.01.1996க்கு முன்பு அல்லது 01.07.1996க்கு பிறகு ஓய்வு பெற்ற சென்னை மாநகராட்சி ஓய்வூதியர்களுக்கு, அன்னார் ஓய்வு பெற்ற தேதியில் ஓய்வூதியம் எவ்வாறு நிர்ணயம் செய்யப்பட்டதோ அதன் அடிப்படையிலேயே, 01.01.1996 மற்றும் 30.06.1996க்கு இடைப்பட்ட காலத்தில் ஓய்வு பெற்றவர்களுடைய ஓய்வூதியத்தையும் அவரவர்களுக்கு எது அதிகபட்ச பணப்பயன் கிடைக்குமோ அதன் அடிப்படையில் (Whichever is advantageous) அன்னாரிடமிருந்து விருப்பக் கடிதம் பெற்று மறு நிர்ணயம் செய்து திருத்திய ஓய்வூதியம் வழங்க வெளியிடப்பட்ட மேற்படி அரசாணையை அமலாக்கம் செய்ய நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

“24.01.2008 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தின் தீர்மான எண்.02/2008 நாள் 24.01.2008–ன்படி அரசாணை நிலை எண்.446 நிதி (ஊதியக்குழு) துறை, நாள். 18.9.2007ஐ அமலாக்கம் செய்ய இதற்கு நிலைக்குழு(வ.வி.ம.நி) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது ”

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: பொ.து.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

பே.சா.து.ந.க.எண்.பி1/0132/2007
ஆணையரது 21.01.08 நாளிட்ட குறிப்பு

**31.01.2008 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண்.47/2008 பொருள் எண். 47

**மயிலாப்பூர் திருவல்லிக்கேணி வட்டம் – டாக்டர். இராதாகிருஷ்ணன் சாலையில் நடைபாதை (ம) பயன்பாட்டு சாலையாக அகலப்படுத்த நிலங்கள் கையகப்படுத்துதல்**

சென்னை மாவட்டம், மயிலாப்பூர் – திருவல்லிக்கேணி வட்டம், கதீட்ரல் சாலை மற்றும் டாக்டர் இராதாகிருஷ்ணன் சாலையினை அகலப்படுத்திட, 8 கிரவுண்டு 1769 சதுர அடி விஸ்தீரணம் கொண்ட நிலங்களை ஆர்ஜிதம் செய்ய அரசாணை எண். 156 ந.நி.(ம) குடிநீர் வழங்கல் துறை நாள்.20.11.07 மற்றும் அரசாணை எண். 166 ந.நி.(ம) குடிநீர் வழங்கல் துறை நாள்.4.12.2007–ன் படி அனுமதிக்கப்பட்டுள்ளது. இந்நிகழ்வில் நில உரிமையாளர்களுக்கு 80 சதவீதம் இழப்பீட்டுத் தொகை உடனே வழங்க வேண்டியுள்ளது. மயிலாப்பூர் – திருவல்லிக்கேணி தாலூக்கா வட்டாட்சியரிடமிருந்து பெறப்பட்ட கணக்கீட்டுத்தாளின் படி இதற்கான தோராய இழப்பீட்டுத் தொகை சுமார் ரூ.12,27,13,677/– (ரூபாய் பன்னிரண்டு கோடி, இருபத்தி ஏழு இலட்சத்து, பதின்மூன்றாயிரத்து, அறுநூற்று எழுபத்து ஏழு மட்டும்) நில உரிமையாளர்களுக்கு வழங்கும் பொருட்டு வட்டாட்சியர், மயிலாப்பூர் – திருவல்லிக்கேணி வட்டம் அவர்களுக்கு ரூ.12,27,13,677/–ஐ காசோலையாக வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இந்நிகழ்வு மன்றத்தின் பார்வைக்கு நிலைக்குழு (பணிகள்) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு (ம) நிதி) மூலமாக சமர்ப்பிக்கப்படுகிறது.

‘22.01. 2008 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தில் தீர்மான எண்.26 நாள்: 22.1.2008-ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து நிலைக்குழு (வ.வி.ம.நி) மூலமாக மன்றத்தின் பார்வைக்கு சமர்ப்பிக்கப்படுகிறது".

‘‘24.01.2008 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தின் தீர்மான எண்.11/ 2008 நாள் 24.01.2008–ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து மன்றத்தின் பார்வைக்கு சமர்ப்பிக்கப்படுகிறது ’’.

‘‘இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது’’
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: பே.சா.து.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

## தொ.நோ.ம.மனை.ந.க.எண்.அ1/895/2007
## ஆணையாளரின் 03.12.2007நாளிட்ட குறிப்பு.

## 31.01.2008 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்

தீர்மான எண்.48/2008 பொருள் எண்: 48

சென்னை மாநகராட்சி, சுகாதாரத்துறையின் கட்டுப்பாட்டில் இயங்கும் தொற்று நோய் மருத்துவமனையில் சுயநிதித்திட்டத்தின் கீழ் 24–06–2004 நாளிட்ட மன்றத் தீர்மான எண்.184/2004 ன்படி மருத்துவ ஆய்வகப் பட்டயப்படிப்பு நடத்தப்பட்டு வருகிறது.

மருத்துவ ஆய்வகப் பட்டயப்படிப்பு மாணவர்களுக்கு கல்வி புகட்ட வி.பி.எஸ். ஹவுஸ் கீப்பிங் என்ற நிறுவனம் மூலம் ஆசிரியர்கள் மற்றும் தட்டச்சு தெரிந்த எழுத்தர் வெளி ஏஜென்சி அடிப்படையில் ஒரு வருடத்திற்கு பணியமர்த்தப்பட்டனர்.

வி.பி.எஸ். ஹவுஸ் கீப்பிங் நிறுவனத்தினர் கோரிய ஒப்பந்தப்புள்ளி அங்கீகரிக்கப்படாததால் அவர்கள் தங்கள் சேவையை நிறுத்திக் கொள்வதாக கடிதம் அளித்தனர்.

ஒப்பந்தப்புள்ளி மூலம் ஒப்பந்தம் மூலம் பணியாளர்கள் வெளி ஏஜென்சி பணியமர்த்த எடுக்கப்பட்ட முயற்சியின் போது எவரும் முன்வரவில்லை என தெரிவிக்கப்படுகிறது.

மருத்துவ ஆய்வகப்பட்டயப்படிப்பு (DMLT) மாணவர்களுக்கு கல்வி புகட்ட தேவையான கீழ்க்கண்ட பணியாளர்களின் அவசியமாக தற்போது தேவைப்படுகின்றனர்.

| | |
|---|---|
| எம்.எஸ்.சி. நுண்ணுரியியல் படித்த ஆசிரியர் | – 1 |
| எம்.எஸ்.சி. உயிர் வேதியியல் படித்த ஆசிரியர் | – 1 |
| தட்டச்சு தெரிந்த எழுத்தர் | – 1 |

தற்போது போதுமான ஆசிரியர் மற்றும் தட்டச்சு தெரிந்த எழுத்தர் இல்லாததினால் மருத்துவ ஆயூவகப்பட்டயப்படிப்பு மாணவர்களுக்கு பாடம் கற்பித்தலில் இடையூறு ஏற்படுகிறது. மருத்துவ ஆய்வகப் பட்டயப்படிப்பு மாணவர்களுக்கு தொடர்ந்து நடத்த நுண்ணுயிரியல் ஆசிரியர், உயிர் வேதியியல் ஆசிரியர் மற்றும் தட்டச்சு தெரிந்த எழுத்தர் ஒருவரும் அவசியமாக தேவைப்படுகிறது. அவர்களை வெளி ஏஜென்சி மூலம் பணியமர்த்த முடியாமைக்கு காரணம் குறைந்த சம்பளம் என தெரிய வருகிறது. ஆதலால் நுண்ணுயிரியல் ஆசிரியர், உயிர் வேதியியல் ஆசிரியர் அவர்களுக்கு இதற்கு முன்பு அளிக்கப்பட்ட சம்பளமான ரூ. 5,000/– லிருந்து ரூ.7,000/– ஆக உயர்த்தவும், தட்டச்சு தெரிந்த எழுத்தரின் மாத ஊதியத்தை ரூ. 2,000/– லிருந்து ரூ. 3,000/– ஆக உயர்த்தவும் செய்தால் தேவையான பணியாளர்கள் கிடைக்க வாய்ப்பு உண்டு என்ற கருத்து தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

அவ்வாறு மாத ஊதியத்தைத உயர்த்தி அளித்தால் அவர்களுக்கு மாற்றிய ஊதியத்தை அளிக்க தேவையான நிதி PMC Fund Code No.316–ல் உள்ளது என்றும் தெரிவிக்கப்படுகிறது.

எனவே,

1. மருத்துவ ஆய்வகப்பட்டயப்படிப்பை தொடர்ந்து நடத்த நுண்ணுயிரியல் ஆசிரியர், உயிர் வேதியியல் ஆசிரியர் – அவர்கள் ஒவ்வொருவருக்கும் இதற்கு முன்பு அளிக்கப்பட்ட சம்பளமான ரூ. 5,000/– லிருந்து ரூ.7,000/– ஆக உயர்த்தவும் தட்டச்சு தெரிந்த எழுத்தரின் மாத ஊதியத்தை ரூ. 2,000/– லிருந்து ரூ. 3,000/– ஆக உயர்த்தவும்,
2. இதற்காக ஆகும் அதிக செலவினத்தை ஏற்கனவே உள்ள PMC Fund Code No.316–ல் இருந்து மேற்கொள்ளவும்.

மன்றத்தின் அனுமதி வேண்டி நிலைக்குழு (பொது சுகாதாரம்) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக சமர்ப்பிக்கப்படுகிறது.

" 9.1.2008 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பொது சுகாதாரம்) கூட்டத்தின் தீர்மான எண்.06/08 நாள் 9.1.2008–ன்படி இதற்கு நிலைக்குழு (பொது சுகாதாரம்) பரிந்துரை செய்து நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகின்றது "

“24.01.2008 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தின் தீர்மான எண்.06/ 2008 நாள் 24.01.2008–ன்படி 1 மற்றும் 2 இனங்களுக்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது ”

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”

//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: தொ.நோ.ம.

நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(து.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

**க.து.ந.க.எண்.அ1/4155/2007**
**ஆணையர் அவர்களின் 04.01.2008 நாளிட்ட குறிப்பு**

**31.01.2008 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண்.49/2008 பொருள் எண். 49

**சென்னை மாநகராட்சி உயர்நிலை மேல்நிலைப்பள்ளிகளில் தொகுப்பூதியத்தின் அடிப்படையில் பெற்றோர் ஆசிரியர் கழகம் மூலம் ஆசிரியர்கள் நியமித்ததற்கு பின்னேற்பு மற்றும் கூடுதல் மானியத்திற்கு அனுமதி.**

மன்றத் தீர்மான எண்.**185/2004**ன்படி உயர்நிலை, மேல்நிலைப்பள்ளிகளில் பயிலும் மாணவர்களின் கல்வி நலன் கருதியும், ஆசிரியர்களின் பற்றாக்குறையை தீர்க்க பள்ளிகளின் பெற்றோர் ஆசிரியர் கழகம் மூலம் தேவைப்படும் ஆசிரியர்களை தலைமையாசிரியர்களே மாதத் தொகுப்பூதியத்தில் பணி அமர்த்த மன்றத் தீர்மானம் பெறப்பட்டது.

மன்றத் தீர்மான எண்.226/2006ன்படி. 2005–2006 மற்றும் 2006–2007ஆம் ஆண்டுகளில் நியமனம் செய்யப்பட்ட ஆசிரியர்களுக்கு தொகுப்பூதிய அடிப்படையில் கீழ்கண்டவாறு ஊதியம் வழங்கப்பட்டது.

| வ.எண். | 2005–2006ஆம்ஆண்டு | மாதம் ஒன்று | மொத்த மாதம் | நியமிக்கப்பட்ட ஆசிரியர் |
|---|---|---|---|---|
| 1. | முதுகலைப் பட்டதாரி ஆசிரியர் | ரூ.2500/– | 9 | 69 |
| 2. | பட்டதாரி ஆசிரியர்/தமிழாசிரியர் | ரூ.2000/– | 10 | 92 |
| 3. | இடைநிலை ஆசிரியர் | ரூ.1,500/– | 10 | 23 |
| | | | | 184 |

| வ.எண். | 2006–2007ஆம்ஆண்டு | மாதம் ஒன்று | மொத்த மாதம் | நியமிக்கப்பட்ட ஆசிரியர் |
|---|---|---|---|---|
| 1. | முதுகலைப் பட்டதாரி ஆசிரியர் | ரூ.2500/– | 9 | 84 |
| 2. | பட்டதாரி ஆசிரியர்/தமிழாசிரியர் | ரூ.2000/– | 10 | 72 |
| 3. | இடைநிலை ஆசிரியர் | ரூ.1,500/– | 10 | 38 |
| 4. | தமிழ் பண்டிட் | ரூ.2,000/– | 10 | 7 |
| | | | | 201 |

அவ்வாறு பணியமர்த்தப்பட்ட ஆசிரியர்களுக்கு பெற்றோர் ஆசிரியர் கழக நிதியிலிருந்து ஊதியம் வழங்கியதற்காக கூடுதலாக தேவைப்பட்ட தொகை கணக்கு குறியீடு எண்.**184** கல்வித்தரம் மேம்பாட்டு நிதி மூலமாக இணை மான்யமாகப் பெற்று வழங்கப்பட்டது.

மன்றத் தீர்மான எண்:**185/2004**ன்படி நடப்பு கல்வி ஆண்டில், **2007–2008**ல் கூடுதலாக தேவைப்படும் **152** ஆசிரியர்களை அந்தந்தப்பள்ளி தலைமையாசிரியர்கள் மூலம் தொகுப்பூதியம் அடிப்படையில் பெற்றோர் ஆசிரியர் கழக நிதியில் நியமனம் செய்வதற்கு மன்றத்தின் அனுமதி எதிர் நோக்கி செய்யப்பட்டது. மேலும் ஆணையரின் முன் அனுமதி பெற்று நியமனம் செய்யப்பட்டுள்ளது.

| வ. எண். | ஆசிரியர்களின் விவரம் | இந்த ஆண்டு (2005–06) ஊதியம் நிர்ணயிக்கப்பட்ட தொகை | மொத்த மாதம் | ஆசிரியர்களின் எண்ணிக்கை | மொத்த தொகை |
|---|---|---|---|---|---|
| 1. | முதுகலைப் பட்டதாரி ஆசிரியர் | ரூ.2500/– | 9 | 63 | 14,17,500/– |
| 2. | பட்டதாரி ஆசிரியர் | ரூ.2000/– | 10 | 53 | 10,60,000/– |
| 3. | தமிழாசிரியர் | ரூ.2,000/– | 10 | 01 | 20,000/– |
| 4. | இடைநிலை ஆசிரியர் | ரூ.1,500/– | 10 | 35 | 5,25,000/– |
| | | | | 152 | 30,22,500/– |

நடப்பு கல்வி ஆண்டிலிருந்து பெற்றோர் ஆசிரியர் கழக நிதியில் நியமனம் செய்யப்பட்டுள்ள **152** ஆசிரியர்களின் ஊதியம் ஜுன் 2007 முதல் அதிகப்படியாக 9 அல்லது 10 மாதங்களுக்கு நியமனம் செய்யப்படும் அடிப்படையில் உத்தேசிக்கப்பட்டுள்ளவாறு மொத்த செலவினத் தொகை ரூ.**30,22,500/–** (ரூபாய் முப்பது இலட்சத்து இருபத்தியிரண்டாயிரத்து ஐநூறு மட்டும்) ஆகும்.

**க.து.ந.க.எண்.அ1/4155/2007**

அந்தந்த தலைமையாசிரியர்களின் ஆசிரியர்கள் நியமனம் செய்யப்படும் மாதங்களின் அடிப்படையில் கேட்கப்பட்ட பட்டியலின்படி, மொத்த செலவினத் தொகை **ரூ.29,26,000/–** அதில் இணைமானியத்தில் **ரூ.3,41,900/–** செலவழிக்கப்பட்டது போக மீதமுள்ள தொகையான **ரூ.25,84,100/–** தேவைப்படுகிறது. இந்த தொகையை அந்தந்த தலைமை ஆசிரியர்கள் பெயரில் காசோலையாக வழங்கப்பட வேண்டும். இத்தொகையை கணக்கு குறியீடு எண்.**184** கல்வித்தரம் மேம்பாட்டு செலவினம் உயர் மற்றும் மேல்நிலைப்பள்ளி 2007–2008 நிதியிலிருந்து செலவினை மேற்கொள்ளலாம்.

மேற்கூறிய காரணங்களின் அடிப்படையில் கீழ்கண்ட இனங்களுக்கு

1. நடப்பு கல்வியாண்டில் ஆசிரியர்களின் பற்றாக்குறையின் காரணமாக பெற்றோர் ஆசிரியர் கழக நிதியில், ஆசிரியர்கள் சென்னை மாநகராட்சி உயர்நிலை பள்ளியில் **152** ஆசிரியர்கள் சென்னை மாநகராட்சி உயர்நிலை/மேல்நிலைப் பள்ளிகளில் ஜுன் 2007 முதல் நியமனம் செய்ததற்கு பின்னேற்ப்பும்,
2. பெற்றோர் ஆசிரியர் கழக நிதியில் நியமனம் செய்யப்பட்டுள்ள ஆசிரியர்களின்ஊதியம் மேற்கண்டவாறு ஜுன் 2007 ஆம் மாதம் முதல் வழங்குவதற்கும்,
3. தலைமையாசிரியர்களின் கடிதத்தின்படி, கூடுதலான செலவினத் தொகையான **ரூ.25,84,100/–** (ரூபாய் இருபத்தி ஐந்து இலட்சத்து எண்பத்தி நான்காயிரத்து நூறு மட்டும்) **184** கல்வித்தரம் மேம்பாட்டு செலவினம் உயர் மற்றும் மேல்நிலைப்பள்ளி 2007–2008 என்ற தலைப்பில் செலவு செய்வதற்கும்,

எனவே இதற்கு நிலைக்குழுக்கள் (கல்வி) மற்றும் (விரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

10.01.2008 அன்று நடைபெற்ற நிலைக்குழு (கல்வி) கூட்டத்தில் தீர்மான எண்.15/2008, நாள்: 10.01.2008-ன்படி இதற்கு நிலைக்குழு (கல்வி) பரிந்துரை செய்து நிலைக்குழு (வ.வி.(ம)நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது"

“24.01.2008 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தின் தீர்மான எண். 05 / 2008 நாள் 24.01.2008–ன்படி 1 முதல் 3 இனங்களுக்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது ”

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: க.து.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(து.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

**இ.பொ.து.ந.க.எண்.எம்1/6889/2007.**
**ஆணையர் அவர்களின் 21.1.2008 நாளிட்ட குறிப்பு.**

**31.01.2008 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண்.50/2008 பொருள் எண்: 50

**8 எண்ணிக்கைகள் போலேரோ ஜீப் ஆய்வு வாகனங்கள் கொள்முதல் செய்யும் பணிக்கு அனுமதி கோருதல்**

சென்னை மாநகராட்சி இயந்திர பொறியியல் துறையின் கீழ் ஆய்வு பணியில் 57 மகேந்திரா ஜீப்கள் மற்றும் 19 டெம்போ டிராக்ஸ் வாகனங்கள் முழுமையாக ஈடுபடுத்தப்பட்டு வருகின்றன. இவற்றில் 10 ஆண்டுகளுக்கு மேல் ஒடி பழுதடைந்த ஆய்வு வாகனங்களுக்கு அதன் பராமரிப்பு செலவு மற்றும் பழுது பார்க்கும் செலவு மிக அதிகம் செலவாவதை கருத்தில் கொண்டு அரசு ஆணை எம்.எஸ்.எண்.960 , உள்துறை நாள் 12.04.07ன்படி ஒரு வாகனம் 10 ஆண்டுகளுக்கு மேல் பயன்படுத்தப்பட்டு வந்தாலும் அல்லது 2.50 இலட்சம் கி.மீ. தூரம் உபயோகப்பபடுத்தப்பட்டாலும் அவ்வாகனங்கள் கழிவு செய்யலாம் என ஆணையிட்டதை கருத்தில் கொண்டு 08 பழைய ஆய்வு வாகன பதிவு எண்கள் 1) TNO4 9192 , 2) TNO4A 9492 , 3) TNO4 A 9493 , 4) TNO4 9192 , 6) TNO4 G 0116 , 7) TCZ 9179 , 8) TCZ 9187 கழிவு செய்து மாற்றாக 2007–08 ஆம் ஆண்டிற்கான வரவு செலவு திட்டத்தில் 08 புதிய மகேந்திரா ஜீப்கள் வாங்குவதற்கு முடிவு செய்யப்பட்டு ஒப்பம் கோரப்பட்டு 11.01.08 அன்று திறக்கப்பட்டது.

இதில் இரண்டு ஒப்பந்ததாரர்கள் கீழ்கண்ட விவரங்கள் மற்றும் விலைப்புள்ளிகள் அளித்து கலந்து கொண்டனர்.

| வ. எண் | விவரம் | திருவாளர்கள் டாடா மோட்டர்ஸ் நிறுவனம் | | திருவாளர்கள் மகேந்திரா & மகேந்திரா லிமிடெட் நிறுவனம் | |
|---|---|---|---|---|---|
| | | ஒன்றின் விலை | மொத்த விலை | ஒன்றின் விலை | மொத்த விலை |
| 1. | 08 புதிய மகேந்திரா ஜீப் வழங்குதல் ( குளிர்சாதன வசதி மற்றும் பவர் ஸ்டீயரிங் உட்பட ) தற்காலிக பதிவு வரி, மற்றும் இடைப்பட்ட போக்குவரத்துக் காப்பீடு, போக்குவரத்து , செலவுகள் உட்பட | 5,38,412.00 | 43,07,296.00 | 5,37,449.13 | 42,99,593.00 |
| | மொத்தம் | | 43,07,296.00 | | **42,99,593.00** |

மேற்கண்ட இரு ஒப்பந்ததாரர்களும் ஒப்ப வைப்புத்தொகையாக திருவாளர்கள். டாடா மோட்டர்ஸ் லிமிடெட் நிறுவனம் ரூ.43,073/–க்கான வங்கி வரைவோலை மற்றும் திருவாளர்கள் மகேந்திரா & மகேந்திரா லிமிடெட் நிறுவனம் ரூ.45,000/–க்கான வங்கி வரைவோலை செலுத்தியும் கலந்து கொண்டார்கள். இதில் குறைந்த விலைப்புள்ளி அளித்த திருவாளர்கள். மகேந்திரா & மகேந்திரா லிமிடெட் நிறுவனம் ஒரு வாகனத்தின் விலையாக ரூ.5,37,449.13 வீதம் 8 வாகனங்களுக்கு மொத்தத் தொகையாக ரூ.42,99,593/– கோரியுள்ளார்கள்.

திருவாளர்கள். மகேந்திரா & மகேந்திரா லிமிடெட் நிறுவனம் ரூ.45,000/–க்கான வங்கி வரைவோலை HDFC வங்கி மூலம் பெற்று சமர்ப்பித்திருந்தார்கள். HDFC வங்கி மூலம் சமர்ப்பித்த வரைவோலையின் தகுதி பற்றி முடிவெடுக்க 14.01.08 அன்று ஒப்பக்குழுவின் முன் கோப்பு சமர்ப்பிக்கப்பட்டது. HDFC வங்கி ஒரு தேர்ந்தெடுக்கப்பட்ட வங்கி (Scheculed Bank ) என்பதால் இவ்வங்கியின் வரைவோலையை ஏற்கலாம் என்று ஒப்பக்குழு கருத்து தெரிவித்துள்ளது.

அதன்படி , திருவாளர்கள். மகேந்திரா & மகேந்திரா லிமிடெட் நிறுவனத்தை விலைக்குறைப்பு செய்ய கேட்டுக்கொள்ளப்பட்டது. அதற்கு அந்நிறுவனம் தனது 21.01.08 தேதியிட்ட பேக்ஸ் கடிதம் மூலம் விலைக்குறைப்பு செய்தபின் விவரம் பின்வருமாறு.

<u>இ.பொ.து.ந.க.எண்.எம்1/6889/2007.</u>

| வ. எண் | விவரம் | திருவாளர்கள் மகேந்திரா & மகேந்திரா லிமிடெட் நிறுவனம் | |
|---|---|---|---|
| | | ஒன்றின் விலை | மொத்த விலை |
| 1 | 08 புதிய மகேந்திரா ஜீப் வழங்குதல் ( குளிர்சாதன வசதி மற்றும் பவர் ஸ்டீயரிங் உட்பட ) மற்றும் 12.5% VAT வரிகள் உட்பட | 5,11,670.25 | 40,93,362.00 |
| 2 | தற்காலிக பதிவு வரி, மற்றும் இடைப்பட்ட போக்குவரத்துக் காப்பீடு, போக்குவரத்து , செலவுகள் உட்பட | 6,772.00 | 54,176.00 |
| | மொத்தம் | | **<u>41,47,538.00</u>** |

இவ்விலையானது நியாயமானதாக கருதப்படுவதால் இதனை பரிந்துரைக்கலாம் என கருத்து தெரிவிக்கப்படுகின்றது.

இவ்வகை வாகனங்கள் (மகேந்திரா ஜீப்ஸ் ஏற்கனவே சென்னை மாநகராட்சியில் பயன்படுத்தப்பட்டு வருவதாலும், இவைகளின் செயல்பாடு திருப்திகரமாக உள்ளதாலும், மகேந்திரா பொலேரோ வாகனங்கள் வாங்கலாம் என பரிந்துரைக்கப்படுகிறது.

மேலும் வாகனத்தை ஒப்படைக்கும்போது திருவாளர்கள். மகேந்திரா & மகேந்திரா லிமிடெட் நிறுவனத்தின் அங்கீகரிக்கப்பட்ட விற்பனையாளரான திருவாளர்கள் M.P.L. மோட்டார்ஸ் பிரைவேட் லிமிடெட் நிறுவனம் கேட்டுக்கொண்டபடி வாகன பதிவு செலவுகள் , தகுதி சான்றிதழ் மற்றும் காப்பீடு செலவுகள் உட்பட ரூ.3,12,200/-ஐ உரிய சான்றுகளின்படி வழங்கலாம் அல்லது உதவி செயற்பொறியாளர் (இ) - 4 அவர்களுக்கு முன்பணமாக வழங்கி பதிவு செய்யலாம் என கருத்து தெரிவிக்கப்படுகின்றது.

மேற்கண்ட இச்செலவினத் தொகையை இயந்திர பொறியியல் துறையில் ஒதுக்கப்பட்ட 2007-08 ஆண்டிற்கான மூலதன வரவு செலவு கணக்கிலிருந்து கொள்முதல் செய்யலாம் என கருத்து தெரிவிக்கப்படுகின்றது.

எனவே,

1. ஒப்பத்தில் குறைந்த விலைப்புள்ளி அளித்த திருவாளர்கள். மகேந்திரா & மகேந்திரா லிமிடெட் நிறுவனத்திடமிருந்து 8 எண்ணிக்கைகள் பொலேரோ ஜீப் ஆய்வு வாகனங்களின் மொத்த விலையான ரூ.**<u>41,47,538.00</u>**/-க்கு ஒப்பத்தில் கேட்டுக்கொண்டுள்ளபடி தயாரித்து வழங்க கொள்முதல் ஆணை வழங்கவும்,
2. திருவாளர்கள். மகேந்திரா & மகேந்திரா லிமிடெட் நிறுவனம் கேட்டுக்கொண்டுள்ளபடி வாகனங்களுக்கான முழுத்தொகை ரூ.40,93,362.00/-ஐ முன் பணமாக திருவாளர்கள். மகேந்திரா & மகேந்திரா லிமிடெட் நிறுவனம் பெயரில் காசோலையாக வழங்கவும்,
3. திருவாளர்கள். மகேந்திரா & மகேந்திரா லிமிடெட் நிறுவனம் கேட்டுக்கொண்டுள்ளபடி வாகனங்களுக்கான நிரந்தரப்பதிவு , இடைப்பட்ட போக்குவரத்த காப்பீடு மற்றும் போக்குவரத்து செலவிற்கான மொத்தத்தொகை ரூ.54,176/-ஐ முன்பணமாக திருவாளர்கள் M.P.L. மோட்டார்ஸ் பிரைவேட் லிமிடெட் என்ற பெயரில் காசோலையாக வழங்கவும்,
4. திருவாளர்கள். மகேந்திரா & மகேந்திரா லிமிடெட் நிறுவனம் மூலமாக வாகனங்கள் ஒப்படைக்கும் போது வாகன பதிவு செலவு , தகுதி சான்றிதழ் மற்றும் காப்பீடு செலவுகள் உட்பட ரூ.3,12,200/-ஐ உரிய சான்றுகளின்படி வழங்க அல்லது உதவி செயற்பொறியாளர் (இ)-4 அவர்களுக்கு முன்பணமாக வழங்கி உரிய பதிவு மேற்கொள்ளவும்,
5. மேற்கண்டச் செலவீனத்தை இயந்திர பொறியியல் துறையில் ஒதுக்கப்பட்ட 2007-08 ஆண்டிற்கான மூலதன வரவு செலவு கணக்கிலிருந்து கொள்முதல் செய்யவும்,

**இ.பொ.து.ந.க.எண்.எம்1/6889/2007.**

6. திருவாளர்கள். மகேந்திரா & மகேந்திரா லிமிடெட் நிறுவனம் வாகன உற்பத்தியாளர்கள் என்பதால் பாதுகாப்புத்தொகை செலுத்துவதிலிருந்து விலக்களிக்கவும் , ஆணையர் , சென்னை மாநகராட்சி அவர்களின் பெயரில் உடன்படிக்கை செய்து கொள்ளவும்,

மேற்கண்ட 1 முதல் 6 இனங்களுக்கு நிலைக்குழு (பணிகள்) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

‘‘22.01. 2008 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தில் தீர்மான எண்.28 நாள்: 22.1.2008-ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து நிலைக்குழு (வ.வி.ம.நி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

‘‘24.01.2008 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தின் தீர்மான எண்.12/ 2008 நாள் 24.01.2008ன்படி 1 முதல் 6 வரை இனங்களுக்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது ’’

‘‘இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது’’
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: இ.பொ.து.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(து.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

**ம.க.கு.ந.க.எண்.அ8/9114/07**
**ஆணையாளர் அவர்களின் 14/01/2008 நாளிட்ட குறிப்பு**

**31.01.2008 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண்.51/2008 பொருள் எண்: 51

**அரசு கடிதத்திற்கு பின்னேற்பு ஆணை வேண்டி**

மத்திய கணக்கு குழுமத்தின் சுற்றறிக்கை, ம.க.கு.ந.களண்.அ8/4546/04, நாள்:18/12/2006ல், அரசு கடித எண்.25888/ச.கு/2005–06, நாள்:22/11/2006, நிதி (ச.கு) துறையில் அறிவுறுத்தியபடி, சென்னை மாநகராட்சி பிரிவு மேலாளர்களுக்கு ஊதிய ஏற்ற முறை விகிதத்தை ரூ.5500–175–9000யிலிருந்து ரூ.5300–150–8300 ஆக 01/01/1996 முதல் மறு நிர்ணயம் செய்யவும், அவ்வாறு நிர்ணயம் செய்யும்போது அதிகப்படியாக வழங்கப்பட்ட ஊதியம் மற்றும் படிகள் தொகையினை பிடித்தம் செய்யவும் அறிவுறுத்தப்பட்டது.

சென்னை மாநகராட்சி பிரிவு மேலாளர்கள் தாங்களும் தலைமைச் செயலகத்தில் பணிபுரியும் கண்காணிப்பாளரும் இரண்டாவது சம்பளகுழுவிற்கு முன் ஒரே ஊதிய ஏற்ற விகிதத்தில் பணியாற்றியதாக குறிப்பிட்டு, தங்களுக்கும் ஊதிய ஏற்ற விகிதத்தை ரூ.5300–150–8300யிலிருந்து ரூ.5500–175–9000ற்கு மாற்றியமைக்கும்படி அரசுக்கு முறையிட்டனர். இக்கோரிக்கையினை அரசு மீண்டும் பரிசீலித்து பிரிவு மேலாளர்களுக்கு ஊதிய ஏற்ற விகிதத்தை ரூ.5300–150–8300யிலிருந்து ரூ.5500–175–9300ற்கு மாற்றிமைப்பது முறையானதல்ல என அரசு தெரிவித்தது. ஆயினும், பிரிவு மேலாளர்களுக்கு ஏற்படும் கடினத்தை கருத்தில் கொண்டு, சென்னை உயர்நீதிமன்ற தீர்ப்பின்படி, சென்னை மாநகராட்சியில் பணிபுரியும் பண்டக காப்பாளர்களுக்கு வழங்கியதுபோல், பிரிவு மேலாளர்களுக்கு ஊதிய ஏற்ற விகிதம் ரூ.5500–175–9000ல் அதிகமாக வழங்கப்பட்ட ஊதியம் மற்றும் படிகள் ஆகியவற்றை கைவிட அரசு முடிவு செய்தது.

அரசு செயலாளர், நிதி (சம்பளகுழு) துறை அவர்களின் 21/11/2007 நாளிட்ட கடிதம், எண்.72171/ச.கு./2006–1ல், சென்னை மாநகராட்சி பண்டக காப்பாளர்களுக்கு உயர்நீதி பேராணை எண்.1200/2001, நாள்:26/10/2006ன்படி அதிகமாக வழங்கப்பட்ட ஊதியம் மற்றும் படிகள் கைவிட்டதுபோல், சென்னை மாநகராட்சி பிரிவு மேலாளர்களின் ஊதியத்தை 01/01/1996யிலிருந்து இதற்கு முந்தைய ஊதிய ஏற்ற விகிதமான ரூ.1600––2660ற்கான ஊதிய ஏற்ற விகிதம் ரூ.5300–150–8300ல் மறுநிர்ணயம் செய்யவும், அவ்வாறு நிர்ணயம் செய்யும்போது அதிகமாக வழங்கப்பட்ட ஊதியம் மற்றும் படிகள் ஆகியவற்றை கைவிடவும் ஆணையிட்டுள்ளது. மேலும், அரசு இது குறித்து முழு அறிக்கையினை 30/11/2007ற்குள் அனுப்பவும் கோரியுள்ளது.

எனவே, மத்திய கணக்கு குழுமத்தின் சுற்றறிக்கை எண்.ம.க.கு.ந.க.எண்.அ8/9114/07, நாள்:07/12/2007ல் பிரிவு மேலாளர்கள் ஊதிய ஏற்ற விகிதம் ரூ.5300–150–8300ல் மறுநிர்ணயம் செய்து, இதனை டிசம்பர் 2007 மாத ஊதியத்தில் மாற்றியமைக்கவும், அதிகமாக வழங்கப்பட்ட ஊதியம் மற்றும் படிகளை பிடித்தம் ஏதும் செய்யாமல் கைவிடவும் துறைத்தலைவர்கள்/மண்டல அலுவலர்களுக்கு சுற்றறிக்கை விடப்பட்டது.

எனவே, பிரிவு மேலாளர்களின் ஊதிய ஏற்ற விகிதத்தை மறுநிர்ணயம் செய்ததற்கும், அதிகமாக வழங்கப்பட்ட ஊதியம் மற்றும் படிகள் ஆகியவற்றை கைவிட்டதற்கும், மேற்கண்ட அரசு கடிதத்திற்கு நிலைக்குழு (வருவாய் மற்றும் நிதி) மூலமாக, மன்றத்தின் பின்னேற்பு ஆணை வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

“24.01.2008 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தின் தீர்மான எண்.03/2008 நாள் 24.01.2008–ன்படி அரசு கடித எண். 72171/ச.கு./06–1, நாள்.21.11.07 கடிதத்திற்கு நிலைக்குழு(வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது ”

“இதற்கு மன்றம் பின்னேற்பு அனுமதி அளிக்கின்றது”
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: ம.க.கு.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

**31.01.2008 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண்.52/2008 பொருள் எண்: 52

**மன்ற உறுப்பினர்களின் அமர்வுப்படி உயர்வு**

நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளில் தேர்ந்தெடுக்கப்பட்ட மன்ற உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்ட அமர்வுப்படி **ரூ.550/–**யை **ரூ.800/–** ஆக உயர்த்தி வழங்க அரசாணை (இருபதாண்டு) எண்.**204** நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (தேர்தல்) துறை நாள். **26.06.2007** மூலம் அரசு ஆணையிட்டுள்ளது.

இவ்வரசாணையின்படி சென்னை மாநகராட்சி மன்ற உறுப்பினர்களுக்கு ஜுலை **2007**லிருந்து அமர்வுப்படியை உயர்த்தி வழங்கியமைக்கு நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி)வின் மூலமாக மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டப்படுகிறது.

‘‘24.01.2008 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தின் தீர்மான எண்.01/2008 நாள் 24.01.2008–ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது ’’

‘‘இதற்கு மன்றம் பின்னேற்பு அனுமதி அளிக்கின்றது’’
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: ம.து.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(து.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

## 31.01.2008 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்

தீர்மான எண்.53/2008 பொருள் எண். 53

### பெரம்பூரில் மேம்பாலம் அமைக்கும் பணி – தற்போதுள்ள ஒப்பத்தை முடிவு செய்தல் மற்றும் புதிய ஒப்பம் கோரப்பட்டமைக்கு பின்னேற்பு அனுமதி கோரல்

சென்னை மாநகராட்சி, பாலங்கள் துறையால் பெரம்பூர் மேம்பாலப்பணி மேற்கொள்ளப்பட்டுவருகிறது. இப்பாலப்பணியின் ஒப்பந்ததாரர் இந்திய அரசு நிறுவனமான திருவாளர்கள். நேஷனல் பில்டிங் கன்ஸ்டிரக்ஷன் கார்ப்பரேஷன் லிட்., மூலம் ரூ.10.69 கோடியில் மேற்கொள்ள பணி ஆணை வழங்கப்பட்டு ஒப்பந்ததாரரால் ஆழ்துளைக்கடைக்கால் அமைக்கும் பணி 17.2.99 அன்று துவங்கப்பட்டது. ஆழ்துளைக்கடைக்கால்களின் மீது பளுதாங்கும் சோதனை மேற்கொள்ளப்பட்டதில், வடிவமைப்பின்படி தேவையான பளுவினை கடைக்கால்கள் தாங்க இயலாத நிலையின் காரணமாக, இந்திய தொழில்நுட்ப கழகத்திடம் (IIT) திருத்திய வடிவமைப்பு பெறப்பட்டு ரூ.34.84 கோடிக்கு பணிக்கான திருத்திய மதிப்பீடு தயாரிக்கப்பட்டது. பின்னர் ஒப்பந்ததாரர் திருவாளர்கள். என்.பி.சி.சி.லிட் மூலமாகவே பணி தொடரப்பட்டது.

இந்நிலையில் 2001ம் ஆண்டில் ஏற்பட்ட ஆட்சி மாற்றத்தினால் அமைக்கப்பட்ட விசாரணை குழுவின் காரணமாக பணி தொடரமுடியாமல் நின்று போனது. மீண்டும் 2006ம் ஆண்டு அரசு இப்பணியினை விரைந்து முடிக்க கேட்டுக்கொண்டது.

விசாரணை கமிஷன் அமைக்கப்பட்டதன் காரணமாக ஏற்பட்ட கால தாமதத்தின் காரணமாக இப்பணியை ஏற்கனவே மேற்கொண்ட ஒப்பந்ததாரர் திருவாளர்கள்.என்.பி.சி.சி.லிட்., அவர்களிடம் செய்துகொண்ட ஒப்பந்த உடன்படிக்கையின் நிலையினை குறித்து தமிழக அரசு தலைமை வழக்கறிஞர் (Advocate General of Tamil Nadu) அவர்களிடம் விளக்கம் கோரப்பட்டது. தமிழக அரசு வழக்கறிஞர் மேற்படி ஒப்பந்ததாரரிடம் செய்து கொண்ட ஒப்பந்த உடன்படிக்கை செயலிழந்தது என தெரிவித்தார். இதனிடையே திருவாளர்கள். என்.பி.சி.சி. அவர்கள் மத்திய அரசின் கூடுதல் தலைமை வழக்கறிஞர் (Additional Solicitor General) அவர்களிடம் இருந்து பெறப்பட்ட சட்டக்கருத்தினை வழங்கினார். மத்திய அரசின் கூடுதல் தலைமை வழக்கறிஞர் அவர்கள் வழங்கிய கருத்தில் ஒப்ப விதிகளின்படி ஒப்பந்ததாரின் ஒப்ப உடன்படிக்கை செல்லத்தக்கது எனவும், மேலும் ஒப்பந்ததாரர் தொடர்ந்து பணியை மேற்கொள்ளலாம் என தெரிவித்திருந்தார்.

திருவாளர்கள்.என்.பி.சி.சி. லிமிடெட் அவர்கள் தங்களது 31.07.2006 மற்றும் 02.08.2006 நாளிட்ட கடிதங்கள் மூலம் ஈடு செய்தல் நிகழ்விற்கான தொகை மற்றும் ஒப்ப விலை சரிப்படுத்துதலின்படி தற்காலிகமாக பணி நிறுத்தி வைக்கப்பட்ட காலத்திற்கான தொகையான ரூ.1.45 கோடி மற்றும் விலையேற்றத்தின் காரணமாக ரூ.8.05 கோடி கூடுதலாக கோரினர். திருவாளர்கள்.என்.பி.சி.சி.லிமிடெட்., அவர்களுடன் பேச்சுவார்த்தை மேற்கொள்ளப்பட்டதில் ஒப்பந்த உடன்படிக்கையில் உள்ள ஒப்ப விதிகள் 44.1(சி), 44.2 மற்றும் 47ன்படியும் மத்திய அரசின் கூடுதல் தலைமை வழக்கறிஞர் அவர்களின் கருத்துருவின்படியும் பணியினை மேற்கொண்டு தொடர தங்களுக்கு உரிமையுள்ளது என்று தெரிவித்தனர். தமிழக அரசு தலைமை வழக்கறிஞரிடம் மத்திய அரசின் கூடுதல் தலைமை வழக்கறிஞர் அவர்கள் வழங்கிய சட்டக்கருத்துருவினை பற்றி விளக்கம் கோரப்பட்டது. தமிழக அரசு தலைமை வழக்கறிஞர் அவர்களும் இது தொடர்பாக மறு ஆய்வு மேற்கொண்டு திருவாளர்கள். என்.பி.சி.சி.லிமிடெட் அவர்கள் ஒப்ப விலை சரிபடுத்துதலின்படி கோரிய தொகையினையும் மற்றும் ஒப்பக்கால நீட்டிப்பினையும் சென்னை மாநகராட்சி அளிக்கலாம் என தனது கருத்துருவில் தெரிவித்தார்.

இதன்படி நவம்பர்–2006இல் அன்றைய தேதியில் மீதமுள்ள இனங்களுக்கான தொகையாக ஒப்பந்த உடன்படிக்கையில் உள்ள ஒப்ப விலை சரிப்படுத்துதலுக்கான தொகை ரூ.7.98கோடி என கணக்கிடப்பட்டு திருவாளர்கள்.என்.பி.சி.சி.லிமிடெட்., அவர்களுக்கு தெரிவிக்கப்பட்டது. மேலும் திருவாளர்கள்.என்.பி.சி.சி.லிமிடெட் அவர்கள் கோரியுள்ள பணி நிறுத்தி வைக்கப்பட்ட காலத்திற்கான ஈட்டுத்தொகையாக அவர்கள் கோரியிருந்த ரூ.1.45 கோடி ஏற்க இயலாது என தெரிவிக்கப்பட்டது.

இதனிடையே பெரம்பூர் மேம்பாலப்பணிக்கான மதிப்பீட்டுத்தொகையான ரூ. 34.84 கோடியை ஒப்பந்ததாரருக்கு ஒப்ப விலை சரிப்படுத்துதலின்படி ஏற்படும் கூடுதல் தொகையான ரூ.7.98 கோடி ஆகியவற்றை சேர்த்து ரூ.45.67 கோடி திருத்திய மதிப்பீடு தயாரிக்கப்பட்டு அரசாணை பெறப்பட்டது.

இதன்விளைவாக திருத்திய ஒப்பத்தொகையான ரூ.27.78 கோடிக்கு பணியினை மேற்கொள்ள திருவாளர்கள்.என்.பி.சி.சி.லிட்., அவர்களுக்கு பணி ஆணை வழங்கி திருத்திய ஒப்பந்த உடன்படிக்கை 10.11.2006 அன்று மேற்கொள்ளப்பட்டது.

என்.பி.சி.சி.லிட்., நிறுவனம் பழைய வடிவமைப்பின்படியே ஆழ்துளைக்கடைக்கால் அமைக்கும் பணியை 25.11.2006 அன்று துவக்கியது. ஆனால் அவர்கள் கொண்டு வந்திருந்த கருவியினால் 30மீ ஆழத்திற்குமேல் செல்ல முடியவில்லை. எனவே பணி நிறுத்தப்பட்டது. பாலத்தின் தூண்கள் அமையவிருக்கும் பகுதியில், மண்ணின் கடினத்தன்மையை ஆராய்வதற்கு, விரிவான அடிமண் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது. இந்த பரிசோதனையில் 40மீ ஆழத்திலும் கடினப்பாறை கிடைக்கவில்லை. ஆனால் வடிவமைப்பின்படி ஆழ்துளைக்கடைக்கால்கள் கடினப்பாறையில் ஊடுருவ வேண்டும். எனவே, நிலத்தின் மாறுபடும் மண் தன்மைக்கேற்ப அதன் பளுதாங்கும் சக்தியை கருத்தில் கொண்டும் 2000ம் ஆண்டில் சென்னை நகரம் பூகம்ப மண்டலம்–2லிருந்து பூகம்ப மண்டலம்–3க்கு மாறியதால் மேம்பாலப்பணியின் வடிவமைப்பை பூகம்ப மண்டலம்–3ன் சரத்துக்களுக்கு ஏற்ப உறுதிப்படுத்தவும் இத்திட்டத்தை மாற்று வடிவமைப்பு செய்திட வேண்டியது அவசியமானது. இத்திட்டத்தினை நன்கு ஆராய்ந்து மாற்று வடிவமைப்பு செய்யும் பணி அண்ணா பல்கலைகழகத்திடம் வழங்கப்பட்டது.

அண்ணா பல்கலைக்கழகம் அடி மண் பரிசோதனை முடிவுகளை நன்கு ஆராய்ந்த பின் ஏற்கனவே உள்ள ஆழ்துளை கடைக்கால்களுக்கு பதிலாக திறந்தவெளி கடைக்கால் (Open foundation) அமைக்க பரிந்துரை செய்தது. திருத்திய வடிவமைப்பிற்கேற்ப தூண்களின் அளவுகளில் மாற்றங்கள் செய்ய வேண்டியது அவசியமாகிறது. மேலும் அண்ணா பல்கலைக்கழகம் வழங்கிய திருத்திய வடிவமைப்பு மற்றும் வடிவமைப்பின்படி மேம்பாலத்தின் வளைவுப்பகுதிகளில் மாற்றங்கள் மற்றும் பாலத்தின் அணுகு சாலை பகுதிகளில் சிறு திருத்தங்கள் செய்யப்பட்டன. மேலும் மேம்பாலத்தின் பெரும்பாலான மேற்பகுதிகளிலும் மாற்றங்கள் செய்யப்பட வாய்ப்புள்ளது.

அண்ணா பல்கலைக்கழகம் வழங்கிய திருத்திய வடிவமைப்பில் ஏற்பட்ட மாற்றங்கள் காரணமாக பணியின் மதிப்பீட்டில் உள்ள இனங்களின் அளவுகளில் மாற்றங்கள் ஏற்பட்டுள்ளது. இம்மாற்றங்களுக்கான இனங்களுக்கு திருவாளர்கள்.என்.பி.சி.சி.லிட்., அவர்களிடம் விலை விகிதம் கோரப்பட்டது. ஒப்பந்ததாரர் தனது 17.12.2007 நாளிட்ட நிகிரி மூலம் மேம்பாலத்தின் மேல் பகுதியை தவிர மீதமுள்ள பகுதிகளுக்கு ரூ.22,65,85,650/– செலவினம் ஆகும் என தெரிவித்தது. மேலும் ஏற்கனவே ஒப்பத்தில் உள்ள இனங்களில் பெருமளவு மாற்றங்கள் இருப்பதாகவும் தெரிவித்துள்ளனர். இத்தொகையானது 2007–2008ம் விலை விகிதத்தின்படி 85 சதவீதம் கூடுதல் ஆகும். துணை உடன்படிக்கையின்படி மீதமுள்ள பணிகளுக்கு 44.77சதவீசதம் கூடுதலாக வழங்கப்படும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே இச்சதவீதத்திற்கே பணியினை தொடர சென்னை மாநகராட்சி தனது 19.12.2007 நாளிட்ட கடிதம் மூலம் திருவாளர்கள்.என்.பி.சி.சி.லிட் அவர்களை கோரியது. இது நாள் வரை ஒப்பந்ததாரரிடம் இருந்து எந்தவித பதிலும் பெறப்படவில்லை.

இதற்கிடையே அண்ணா பல்கலைக்கழகத்திடமிருந்து மேலும் வரைபடங்கள் பெறப்பட்டன. இந்த வரைபடங்களின்படி திருத்திய இனங்களுக்கான ஏற்கனவே உள்ள இனங்களைவிட மாறுபட்டு காணப்படுகிறது. மேல் தளத்திற்கான இனங்களும் மாறுபட வாய்ப்புள்ளது.

இதனால் ஆழ்துளைக்கடைக்கால்கள் அமைக்கும் பணி, அதற்கான இரும்புக்குழாய்கள் மற்றும் ஆழ்துளைக்கடைக்கால்களை இணைக்கும் பகுதிகள் நீக்கப்பட்டு அதற்கு பதிலாக உறுதியான அணைப்பு இரும்புத்தகடுகள் (Sheet Pile) கூடிய கடைக்கால் இனம் மற்றும் நீரேற்றத்திற்கான இனம் மற்றும் இதற்குரிய திண்காரை பகுதிகள் ஆகிய புதிய இனங்கள் மாற்று வடிவமைப்பில் இடம்பெற்றுள்ளன. இதுபோன்று வட்ட வடிவமான தூண்களுக்கு பதிலாக சதுரவடிவ தூண்கள் அமைக்கப்படவுள்ளது.

இவ்வாறு மாற்றப்படும் இனங்கள் மற்றும் விடுபடும் இனங்களின் அட்டவணை கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

| Omitted Items | | | | |
|---|---|---|---|---|
| **Sl.No** | **Brief Description of Items** | **Quantity** | **Per** | **Amount** |
| 1 | Supplying, driving and sinking permanent liners using 6mm thick M.S. plate for 900mm dia piles | 4780 | Rm | 26051000 |
| 2 | Supplying, driving and sinking permanent liners using 6mm thick M.S. plate for 750mm dia piles | 1140 | Rm | 5312400 |
| 3 | Stripping of concrete at top of 900mm dia piles | 360 | Rm | 230400 |
| 4 | Stripping of concrete at top of 750mm dia piles | 80 | Rm | 37600 |
| 5 | M40 mix concrete for situ piles of dia 900 | 4880 | Rm | 14786400 |
| 6 | M40 mix concrete for situ piles of dia 750 | 1200 | Rm | 2592000 |
| 7 | Supplying and filling with Karanodai sand | 780 | m3 | 138840 |
| 8 | M40 concrete for Pile cap | 1000 | m3 | 3167000 |
| 9 | M40 concrete for Trestle column and Abutment | 650 | m3 | 2984800 |
| 10 | M40 concrete for R.C.C. Kerbs | 195 | m3 | 739050 |
| 11 | M40 concrete for Parapet wall | 45 | m3 | 183735 |
| 12 | Forming waterbound macadam to a thickness of 75mm | 14000 | m2 | 522200 |
| 13 | Brickwork in cement mortar 1:3 for over 23cm thick walls | 75 | m3 | 118313 |
| 14 | Removing and refixing kerbs | 100 | Rm | 2010 |
| 15 | Removing and refixing C.C.slabs | 250 | $m^2$ | 16590 |
| 16 | Supplying and filling sea sand of 150mm thick below C.C.foot path slabs | 2200 | m3 | 336160 |
| 17 | Supplying and fixing C.C. slabs of size 450x450x50mm | 1000 | $m^2$ | 185600 |
| 18 | Supplying IRC kerbs of size 450x375x200mm etc. | 2220 | No | 180708 |
| 19 | Fixing IRC kerbs of size 450x375x200mm | 1000 | No | 25300 |

| | | | | |
|---|---|---|---|---|
| 20 | Providing and laying lean cement concrete 1:5:11 | 325 | m3 | 366470 |
| 21 | Supplying and fixing M.S.grills for traffic islands. | 6000 | Kg | 214200 |
| 22 | Painting the C.C.kerbs with two coats of tarstill tar etc. | 650 | $m^2$ | 8645 |
| 23 | White washing two coats over new plastered surface for kerbs. | 650 | $m^2$ | 2730 |
| 24 | Painting the new plastered walls with two coats of cement based paint | 500 | $m^2$ | 12300 |
| 25 | Painting new iron work two coats with ready mixed paint of superior quality and approved colour. | 250 | $m^2$ | 9300 |
| 26 | Drilling holes for piles of finished diameter of 900mm a) Upto 20 m depth | 2200 | Rm | 3300000 |
| | b) 20 m to 35 m depth | 1550 | Rm | 3410000 |
| 27 | Drilling holes for piles of finished diameter of 750mm a) Upto 20 m depth | 400 | Rm | 440000 |
| | b) 20 m to 35 m depth 400 M | 280 | Rm | 448000 |
| 28 | conducting routine pile load test for group piles of 750mm dia a) for load upto 740 MT | 2 | No | 800000 |
| | b) for load upto 350 MT | 1 | No | 300000 |
| 29 | conducting routine pile load test for group piles of 900mm dia for load upto 750MT | 2 | No | 800000 |
| 30 | Initial load test of piles of dia 900mm as per I.S 2911 Part IV and MOST specification. | 2 | No | 600000 |
| | | 2 | No | 1300000 |
| 31 | Initial load test of piles of dia 750mm as per I.S 2911 Part IV and MOST specification. | 1 | No | 200000 |
| | | 1 | No | 400000 |
| 32 | Painting lines, dashes, arrows etc, on roads in two coats with ready mixed road marking paints, | 4800 | Rm | 72000 |
| 33 | Supplying, application and curing of anticorrosive Epoxy coating paint | 20400 | $m^2$ | 3564900 |
| | | | | **73858651** |
| | **% variation** | | | 32.55 |

## Variation in items to be executed

| Sl.No | Description of items | Qty. as per previous estimate | Qty. as per revised estimate | Variation in Qty. | % Variation | 2007-08 Rate | Amount |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | Earth work excavation | 6100 | 28750 | -22650 | -371.31 | | -1437855 |
| 2 | PCC M10 concrete | 330 | 700 | -370 | -112.12 | 2017.6 | -746512 |
| 3 | M-40 Concrete for superstructure | 5830 | 5000 | 830 | 14.24 | 3536.23 | 2935070.9 |
| 4 | Steel | 3100 | 2500 | 600 | 19.35 | 40600 | 24360000 |
| 5 | Stripseal expansion joint | 50 | 350 | -300 | -600.00 | 5328 | -1598400 |
| 6 | cutting DGAC | 1900 | 6400 | -4500 | -236.84 | 20 | -90000 |
| 7 | M-40 Concrete for crash barriers | 530 | 600 | -70 | -13.21 | 3321.15 | -232480.5 |
| 8 | Mastic Asphalt concrete | 8000 | 7000 | 1000 | 12.50 | 657.7 | 657700 |
| 9 | Bearing | 120 | 121 | -1 | -0.83 | | 4813133.1 |
| 10 | PVC Down take pipes | 1650 | 1000 | 650 | 39.39 | 201.8 | 131170 |
| 11 | Tack coat 10kg/10m2 | 7000 | 11450 | -4450 | -63.57 | 20.36 | -90602 |
| 12 | Tack coat 5kg/10m2 | 19000 | 55750 | -36750 | -193.42 | 8.69 | -319357.5 |
| 13 | CBM | 7000 | 22333 | -15333 | -219.04 | 308.3 | -4727163.9 |
| 14 | DGAC | 26000 | 23000 | 3000 | 11.54 | 199.7 | 599100 |
| 15 | M-40 concrete for Retaining walls | 1500 | 1200 | 300 | 20.00 | 3463.49 | 1039047 |
| 16 | Supplying, cutting and driving the **sheet pile or 90R rails** | 0 | 6200m2 | -6200 | 100.00 | 520 | 3224000 |
| 17 | **Carting away the surplus earth** and debris to a lead of 10 km | 0 | 25000 | -25000 | 100.00 | 56 | 1400000 |
| 18 | **RMC RCC M40** Design mix for **Footings** | 0 | 4,100 | -4100 | 100.00 | 3464 | 14202400 |
| 19 | **RMC RCC M40** Design mix for **Substructure** | 0 | 2,500 | -2500 | 100.00 | 3536 | 8840000 |
| 20 | **RMC RCC M40** for **approach slabs**. | 0 | 40 | -40 | 100.00 | 3890 | 155600 |
| 21 | Providing **PCC median** of concrete of grade **1: 2: 4** | 0 | 120 | -120 | 100.00 | 2738 | 328560 |
| 22 | **Soling with gravel** 300 mm thick rolled down to 225 mm thick | 0 | 11,600 | -11600 | 100.00 | 47 | 545200 |
| 23 | Providing and laying 2 layers of **sand gravel** mix 1:1 | 0 | 2,650 | -2650 | 100.00 | 40 | 106000 |
| 24 | Providing, laying, spreading and compacting graded stone aggregate to **wet mix macadam** | 0 | 2,900 | -2900 | 100.00 | 1028 | 2981200 |
| 25 | **Conducting load test on footing** in the single lane reach, **(Test Load = 1000 tonnes)** | 0 | 1,000 | -1000 | 100.00 | 225 | 225000 |
| 26 | **Demolition of existing piers, piles, pilecaps and retaining wall** i. | 0 | 600 | -600 | 100.00 | 1726 | 1035600 |
| | | | | | | | 58336410.1 |
| | **Variation in percentage** | | | | | | **25.71** |

ஒப்பத்தில் உள்ள பழைய இனங்களையும் மற்றும் மாற்று வடிவமைப்பின்படி தற்போது புதியதாக உள்ள இனங்களையும் ஒப்பிட்டு பார்த்ததில் தற்போது ஒப்பத்தில் உள்ள 33 இனங்கள் கட்டுமானப்பணிக்கு தேவையற்றதாகின்றன. இந்த 33 இனங்களுக்கான விலையானது ரூ.7.38 கோடியாகும். இத்தொகையானது ஏற்கனவே உள்ள ஒப்பத்தொகையில் 32.55 சதவீதம் ஆகும்.

ஒப்பத்தில் இல்லாத மாற்று இனங்களுக்கான விலையானது ரூ.5.83 கோடி ஆகும். இத்தொகையானது ஏற்கனவே உள்ள ஒப்பத்தொகையில் 25.71 சதவீதம் ஆகும். தமிழ்நாடு ஒளிவு மறைவற்ற ஒப்ப விதியில் கூறு –4ல் துணைவிதி–9ன்படி சாதாரணமாக பணியின் மதிப்பீட்டில் கூடுதலாகவோ அல்லது குறைவாகவோ 25 சதவீதம் வரை மட்டுமே அனுமதிக்கலாம்.

<u>பா.து.ந.க.எண்.பி3/875/96</u>

இப்பணி ஏற்கனவே உள்ள ஒப்பந்ததாரரான திருவாளர்கள். என்.பி.சி.சி.லிமிடெட் மூலம் தொடரப்பட்டால் மேற்குறிப்பிட்ட தமிழ்நாடு ஒளிவு மறைவற்ற ஒப்ப விதி சட்டத்திற்கு மாறானதாக இருக்குமென்பதால் இந்நிலையில் ஏற்கனவே உள்ள ஒப்பந்தத்தை முடிவுக்கு கொண்டு வந்து புதிய ஒப்பம் கோருவதற்கான வழி முறைகளை ஆராயலாம் என கருதப்பட்டது.

இது குறித்து ஒப்பக்குழுமத்திடம் கருத்து கோரப்பட்டது. மேற்பார்வை பொறியாளர்(பாலங்கள்) அவர்கள் சமர்ப்பித்த மேற்குறிப்பிட்ட விவரங்களை ஒப்பக்குழும கூட்டத்தில் ஆய்வு செய்யப்பட்டது. ஏற்கனவே உள்ள ஒப்பத்தில் உள்ள இனங்களில் கட்டுமானத்திற்கு தேவையற்ற இனங்கள் மற்றும் புதிய இனங்கள் மற்றும் தமிழ்நாடு ஒளிவு மறைவற்ற ஒப்ப விதிகளையும் பரிசீலித்து கீழ் காண்பவற்றை ஒப்பக்குழுமம் பரிந்துரை செய்தது.

திருவாளர்கள்.என்.பி.சி.சி.லிமிடெட் ஒப்பந்தத்தில் உள்ள இனங்களை விட அண்ணா பல்கலைகழகம் வழங்கிய மாற்றியமைக்கப்பட்ட வடிவமைப்பின்படி உள்ள இனங்கள் பெரும்பாலானவை மாற்றப்பட்டுள்ளது. மேல்தளத்திற்கான வடிவமைப்பு பெறப்படும் பட்சத்தில் மேலும் சில இனங்களும் வேறுபடக்கூடும்.

புதிய வடிவமைப்பின்படி பணியை மேற்கொள்வதால் திருவாளர்கள்.என்.பி.சி.சி.லிமிடெட் அவர்களுடன் ஏற்பட்ட ஒப்பந்தத்தின்படி உள்ள இனங்கள் பெருவாரியாக மாற்றம் கண்டுள்ளன. விடுபடும் இனங்களின் மதிப்பு, பணியின் மதிப்பில் 32.55 சதவீதம் ஆகும். மாறுபடும் கூடுதல் இனங்களின் மதிப்பு பணியின் மதிப்பில் 25.71 சதவீதம் ஆகும். இவ்வாறு மாறுபடும் மொத்த இனங்களின் மதிப்பு 25 சதவீதத்தை விட அதிக அளவு கூடுதலாகும். இவ்வாறு மாறுபடும் இவ்விரு இனங்களும் தமிழ்நாடு ஒளிவு மறைவற்ற ஒப்பந்தப்புள்ளி சட்ட விதி 2000, அத்தியாயம் –4ல் துணை விதி –9ன்படி புறம்பானதாகும். மேற்குறிப்பிட்ட சட்டவிதி சாதாரணமாக பணியின் மதிப்பீட்டில் 25 சதவீதம் மட்டுமே கூடுதலாகவோ குறைவாகவோ அளிக்கலாமெனத் தெரிவிக்கின்றது.

மேற்குறிப்பிட்டுள்ள காரணங்களால் ஒப்பக்குழுமம், திருவாளர்கள். என்.பி.சி.சி.லிமிடெட் அவர்களுடனான ஒப்பத்தை முடிவுக்கு கொண்டு வரவும், அண்ணா பல்கலைகழகம் வழங்கிய திருத்திய வடிவமைப்பின்படி மாற்றியமைக்கப்பட்ட இனங்களுடன் புதிய ஒப்பங்கள் கோரவும் பரிந்துரை செய்தது.

மேலும், தமிழக அரசு தலைமை வழக்கறிஞர் (Advocate General of Tamil Nadu) அவர்களின் கருத்தும் பெற்றுக்கொள்ளலாமென ஒப்பக்குழுமம் பரிந்துரைத்துள்ளது.

இப்பரிந்துரையை ஏற்பதற்கு வணக்கத்திற்குரிய மேயர் அவர்கள் அனுமதியும் பெறப்பட்டது.

எனவே,

பெரம்பூரில் மேம்பாலம் அமைக்கும் பணிக்கு திருவாளர்கள்.என்.பி.சி.சி.லிமிடெட் அவர்களுடனான ஒப்பத்தை முடிவு செய்ததற்கும் , புதிய ஒப்பம் கோரியமைக்கும் மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி நிலைக்குழு(பணிகள்) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலம் சமர்ப்பிக்கப்படுகிறது.

“22.01.2008 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தில் தீர்மான எண்.25 நாள்: 22.1.2008-ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து நிலைக்குழு (வ.வி.ம.நி) மூலம் மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

“24.01.2008 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தின் தீர்மான எண்.13/ 2008 நாள் 24.01.2008–ன்படி இதற்கு நிலைக்குழு(வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது ”

“இதற்கு மன்றம் பின்னேற்புஅனுமதி அளிக்கின்றது”

//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: பா.து.

நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

மது.ந.க.எண்.அ1/00002/2008.
ஆணையரின் 28.01.2008 நாளிட்ட குறிப்பு

31.01.2008 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்

தீர்மான எண்.54/2008 பொருள் எண். 54

சட்டத்திருத்தம்

அரசு கடிதம் எண்.27958 / Elec./07–04, நாள்.24.12.2007ல் சென்னை மாநகர முனிசிபல் கார்ப்பரேஷன் சட்டம் 1919 பிரிவு 44–ACயில் சில திருத்தங்கள் வெளியிடப்பட்டுள்ளது என்றும் இதனை சென்னை மாநகராட்சியின் தகவலுக்காகவும் தொடர் நடவடிக்கைகாகவும் அனுப்பப்பட்டுள்ளது எனவும், தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேயர் மற்றும் துணைமேயர் அவர்கள் மீது நம்பிக்கையில்லா தீர்மானம் கொண்டு வருவது சம்மந்தமாக உறுப்பினர்களின் எண்ணிக்கை மற்றும் கால அளவை நிர்ணயித்து திருத்தம் செய்து சென்னை மாநகர முனிசிபல் கார்ப்பரேஷன் சட்டம் 1919 பிரிவு 44–ACயில் வெளியிடப்பட்டுள்ள இச்சட்டத் திருத்தத்தினை நிலைக்குழு (வரிவிதிப்பு (ம) நிதி) மூலமாக மன்றத்தின் பதிவிற்கும், தகவலுக்கும் சமர்ப்பிக்கப்படுகிறது. இத்துடன் இத்திருத்தம் வெளியிடப்பட்டுள்ள அரசிதழ் இணைக்கப்பட்டுள்ளது.

“இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 28.1.2008 அன்று தீர்மான எண்.015–ன்படி நிலைக்குழு (வரிவிதிப்பு (ம) நிதி)–ன் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரை பெற்று மன்றத்தின் பதிவிற்கும் தகவலுக்கும் சமர்ப்பிக்கப்படுகிறது”.

“இதனை மன்றம் பதிவு செய்கின்றது”
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: ம.து.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(து.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

வ.து.ந.க.எண்.எம்.4/115/2008
ஆணையாளரின் 26.1.2008 நாளிட்ட குறிப்பு

**31.01.2008 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண்.55/2008 பொருள் எண்.55

**19 புதிய இடங்களில் வாகன நிறுத்த கட்டணம் வசூல் செய்வது**

பொது மேலாளர், தமிழ்நாடு முன்னாள் படை வீரர் கழகம் அவர்களின் 31.12.2007 நாளிட்ட கடிதத்தில், 85 இடங்களில் வாகன நிறுத்தக் கட்டணம் வசூல் செய்வதாகவும், ஏழு இடங்களில் காவல் துறை (போக்குவரத்து) வாகன நிறுத்தம் செய்வதற்கு தடை உத்திரவு பிறப்பித்துள்ளதால் வாகன நிறுத்தக் கட்டணம் வசூல் செய்ய இயலவில்லை என்றும் 13 இடங்களில் லாரி உரிமையாளர்கள், மற்றும் கடை உரிமையாளர்களின் இடைஞ்சல்களினால் வாகனநிறுத்தக் கட்டணம் இழப்பு ஏற்படுவதாகவும், மேலும் 26 புதிய இடங்கள் தேர்வு செய்து அவ்விடங்களில் வாகன நிறுத்தம் செய்து வாகன நிறுத்தக் கட்டணம் வசூல் செய்வதற்கு அனுமதி கேட்கப்பட்டுள்ளது.

சென்னை மாநகரில் உள்ள 85–இடங்களில் காவல் துறை (போக்குவரத்து) அவர்களின் அனுமதி பெற்று வாகன நிறுத்தம் செய்து வாகன நிறுத்தக் கட்டணம் செய்வதற்கு தமிழ்நாடு முன்னாள் படை வீரர் கழகத்திற்கு மாமன்ற தீர்மான எண்.267/2007 நாள்.28.5.2007ன்படி, 1.6.2007 முதல் 31.5.2009 வரை அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. போக்குவரத்து இடைஞ்சல் ஏற்படின் அவ்விடங்களில் வாகன நிறுத்தம் செய்வதற்கு காவல் துறை (போக்குவரத்து) தடை விதிக்கப்பட்டால் அவ்விடங்களில் வாகன நிறுத்தம் செய்து வாகன நிறுத்தக் கட்டணம் வசூல் செய்ய இயலாது. ஆகவே தமிழ்நாடு முன்னாள் படை வீரர் கழகம் தேர்வு செய்த 26 இடங்களின் விவரங்கள் சம்பந்தப்பட்ட மண்டல உதவி வருவாய் அலுவலர்களுக்கு அனுப்பப்பட்டு அவர்களிடம் அறிக்கை பெறப்பட்டது. அதில் 19 இடங்களில் வாகன நிறுத்தம் செய்து வாகன நிறுத்தக் கட்டணம் வசூல் செய்யலாம் என அறிக்கை பெறப்பட்டது.

எனவே, அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள 19 புதிய இடங்களில் வாகன நிறுத்தம் செய்து வாகன நிறுத்தக் கட்டணம் தமிழ்நாடு முன்னாள் படை வீரர் கழகம் மூலம் வசூல் செய்வதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

> ‘‘இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 28.1.2008 அன்று தீர்மான எண்.017–ன்படி நிலைக்குழு (வரிவிதிப்பு (ம) நிதி)–ன் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது’’.

‘‘இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது’’
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: வ.து.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

**வ.து.ந.க.எண்.எம்.4/115/2008**

| NEW PARKING PLACES | | | |
|---|---|---|---|
| **Zone** | **Sl.No.** | **Name of the Place** | **Parking type** |
| III | 1 | **MUC Ground** _MUC Ground in between Indian Oil Petrol Bunk and MUC Club opposite to MMC Hostel Gate | Four Wheelers |
| | 2 | Frazcr Bridge Road From Rattan Bazaar in. (near public toilet) to Madras Medical College Hostel Gate | Four Wheelers |
| V | 3 | Santhosh Super Market 2nd Avenue Anna Nagar. Door No..336 to Door No.339 | Four Wheelers |
| | 4 | Hotel Saravana Bhavan 2nd Avenue D.No.Y 208 Hotel Saravana Bhavan to Y 213 Door State Bank of India | Four Wheelers |
| | 5 | Anna Nagar (2nd Avenue) Door No. X 41 LIC to Door No.C47 /Anna Plaza | Four Wheelers |
| | 6 | Anna Nagar (2nd Avenue) Door No.AC 2 Sugsagar Restaurant to Door No. AC 15 Tamil Nadu Mercantial Bank | Four Wheelers |
| VI | 7 | Marina Beach Uzharpallar statue to Marina swimming pool. | Bus, Van, Four Wheelers |
| | 8 | Walajha Road Shop No.65 Challarams to Shop No.122 Curson | Four Wheelers |
| VII | 9 | CITI Bank (Anna Salai) Door No.161 Popat Jammat to Door No.167 Citit Bank | Four Wheelers |
| | 10 | Khadhar Nawas Khan Road Nungambakkam High Road to Door No. 13/8 Buva House | Four Wheelers |
| | 11 | Apollo Hospital (Greams Lane) From Apollo Hospital to end of the Greams Lane near Canal next to Krishna Deep Chamber No.1 | Four Wheelers |
| | 12 | Whites Road (United Insurance Co) Anna Salai Jn (United Insurance Co) to TVK Salai Junction (Both side parking) | Four Wheelers |
| | 13 | Wallace Garden (2nd Street) Nungambakkam High Road to Door No.15/8 (Both side parking) | Four Wheelers |
| | 14 | Peters Road (Hotel Saravana Bhavan) Under the over bridge towards Hotel Saravana Bhavan all the bays except service bay) | Four Wheelers |
| | 15 | T.Nagar(Venkatanarayana Road) Near Indian Oil Petrol Bunk to Thayagaraya Nagar Social Club New D.No.01 | Four Wheelers |
| | 16 | Maharajapuram (Santhana Salai) Usman Road Jn to Muppathamman Temple | Four Wheelers |
| | 17 | Besant Nagar 2nd Avenue 7th Avenue Road Jn Door No. H/137 to 11th Cross Street Jn (Both side parking) | Four Wheelers |
| | 18 | Besant Nagar Beach Infront of the Hotel Planet International Food Mahal (inside the beach) | Four Wheelers |
| | 19 | Pattinappakkam South Canal Bank Road From Santhome High Road Jn to Mandavellipakkam Ladies Club Building (one side parking) | Four Wheelers |

தமிழ் நாடு முன்னாள் படை வீரர் கழகம் 26, புதிய இடங்களில் வாகனம் நிறுத்தம் செய்ய தேர்வு செய்து அனுப்பப்பட்ட அட்டவனையில் வரிசை எண்.3, 8, 17, 18, 19, 20 மற்றும் 21ல் கண்டுள்ள இடங்களில் வாகனங்களை நிறுத்தினால் போக்குவரத்து நெரிசல் ஏற்படும் என மண்டல உதவி வருவாய் அலுவலர்கள் கருத்து தெரிவித்துள்ளதால் மேற்கண் இடங்களை நீக்கம் செய்யலாம் என தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.